Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 | நடுநிலை நாளிதழ் | ISO : 9001:2015; QT-57977/1125

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,


மலர் Volume : 01 · இதழ் Issue : 116 · வியாழக்கிழமை Thursday · 26.02.2026 · பக்கங்கள் Pages:4 · ₹ 6 · ஈரோடு Erode

விளம்பரதாரர்கள் தேவை
தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

செய்தியாளர்கள் தேவை
தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை
☎ 94440 82959

# கம்யூனிஸ்ட் தலைவர் நல்லகண்ணு காலமானார்

## முழு அரசு மரியாதையுடன் தோழர் நல்லகண்ணுவை வழியனுப்பி வைப்போம் முதலமைச்சர் ஸ்டாலின் உருக்கம்



சென்னை: மறைந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் நல்லகண்ணு உடலுக்கு முழு அரசு மரியாதை செலுத்தப்படும்என்றுமுதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் நல்லகண்ணு (101) உடல்நலக்குறைவு காரணமாக சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் காலமானார். அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ள தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், முழு அரசு மரியாதையுடன் செவ்வணக்கம் செலுத்தி நல்லகண்ணுவை வழியனுப்பி வைப்போம் என்று உருக்கமாக தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் வெளியிட்டுள்ள பதிவில், "எனக்கு ஒரு கண்ணில் சரிவரப்பார்வைஇல்லை என்றாலும், அகத்தில் மற்றொரு கண் இருக்கிறது. அதுதான் நல்லகண்ணு என்று முத்தமிழறிஞர் கலைஞர் கண்ணாகப் போற்றப்பட்ட முதுபெரும் தலைவர் – தோழர் நல்லகண்ணு அய்யா மறைவுற்றார் என்ற செய்தி நம்மையெல்லாம் கடும் துயரத்திற்கு ஆளாக்கியுள்ளது.

நம் சமகாலத்தில் வாழ்ந்த சமரசமற்ற போராளி; நாட்டின் விடுதலை க்காக, பாட்டாளி வர்க்கத்தின் நலனுக்காக தம் இனிய வாழ்வின் பெரும்பகுதியை ஈகம் செய்த தியாகப் பெருஞ்சீலர்.

சிறை, சித்திரவதை, வலிகள் நிறைந்த வாழ்க்கை என்று எத்தனை "இடர்கள் வந்தாலும் – "சுட்டுப்பொசுக்கினாலும் – தோழர்களைத் தூக்கினில் ஏற்றினாலும் விட்டுப்பிரியாது – செங்கொடி வீரம் குறையாது" என்று தோழர் ஜீவா முழங்கியதைப் போல கொள்கை உறுதி குலையாமல் குன்றமென நிமிர்ந்து நின்ற பண்புக்குரியவர் தீரமிகு தோழர் நல்லகண்ணு. கொள்கைக் கனல் அகத்துளே தீயாய் மூண்டு தகிக்க, முகத்திலே புன்னகையுடன் அமைதியாக வலம் வந்த அரசியல் எரிமலை அவர். முத்தமிழறிஞர் கலைஞருடன் என்றென்றும் இனிய நட்பைப் பூண்டிருந்தவர்.

பொடா, எஸ்மா, டெஸ்மா போன்ற அடக்குமுறைச் சட்டங்களுக்கு எதிரான போராட்டக் களங்களில், தலைவர் கலைஞருடன் தோளோடுதோள் நின்று களமாடியவர். பொதுவுடைமைக் கருத்தியலும், திராவிட இயக்கக் கருத்தியலும் சமூக மாற்றத்துக்கான இரட்டைக்குழல் துப்பாக்கியாகச் செயல்பட வேண்டிய கோட்பாட்டுத் தோழமைகள் என்பதில் எப்போதுமே உறுதியாக இருந்தவர். முத்தமிழறிஞர் கலைஞர் தமது ஆட்சிக் காலத்தில் தோழர் நல்லகண்ணு அவர்களுக்கு அம்பேத்கர் விருதை வழங்கிச் சிறப்பித்தார். நமது திராவிட மாடல் அரசின் சார்பில் தோழர் அவர்களுக்குத் தகைசால் தமிழர் விருதை வழங்கும் வாய்ப்பைப் பெற்றது எனது பெரும் பேறு!

எப்போதும் என்மேல் அன்பும் பாசமும் கொண்டவராக இருந்தார். திராவிட மாடல் ஆட்சி அமைந்த பிறகு உருவாக்கிய திட்டங்களை மனப்பூர்வமாக வரவேற்றார். அய்யாவை அவரது ஒவ்வொரு பிறந்தநாளிலும் சந்தித்து வாழ்த்து பெறுவதை நான் வழக்கமாக வைத்திருந்தேன். தோழர் நல்லகண்ணு அய்யா வாழ்ந்த காலத்தில் நாம் வாழ்ந்தோம் என்பது நமக்குப் பெருமை. அவர் பெற்ற விருதுகள், பரிசுகள் எவையானாலும், அவற்றோடு தொகை அனைத்தையும் கட்சிக்காகவும், மக்கள் நலனுக்காக அரசிடம் ஒப்படைத்த அப்பழுக்கற்ற தலைவர் அவர்.

"தான் வேறு, இயக்கம் வேறு என்று பிரித்துப் பார்க்காமல், இயக்கத்திற்காக இயக்கமாகவே வாழ்ந்தவர்" என்று அவரது நூற்றாண்டு விழாவில் நான் குறிப்பிட்டது இன்றும் நினைவலைகளாக வந்து என் நெஞ்சில் மோதுகிறது. தோழரின் மறைவால் வாடும் அவரது குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத் தோழர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலும், ஆறுதலும்.

மறக்க முடியாத அந்த மாமனிதரின் வாழ்வே நமக்காக அவர் விட்டுச் சென்றிருக்கும் மகத்தான செய்தி. அதுவே நமக்கு வழிகாட்டும் ஒளியாகட்டும். பாட்டாளி மக்களுக்காகவே வாழ்ந்து நிறைந்த பகட்டில்லாத் தோழர் நல்லகண்ணு அவர்களின் நினைவும், புகழும் என்றென்றும் காலத்தால் அழியாத கல்வெட்டாக மக்கள் மனதில் நிலைத்திருக்கும். தமிழ்நாட்டின் உயரிய விருது பெற்ற நம் தகைசால் தமிழரை – இனிய தோழரை முழு அரசு மரியாதையுடன் செவ்வணக்கம் செலுத்தி வழியனுப்பி வைப்போம்" என தெரிவித்துள்ளார்.

# "பா.ஜ.க.வை நம்பிதான் அதிமுக இருக்கிறது" முதலமைச்சர் ஸ்டாலின் விமர்சனம்



நாகர்கோவில்: "பாஜக எனும் டப்பா எஞ்சினை நம்பி, அதிமுக இருக்கிறது. அதிமுக என்ற மூழ்கும் கப்பலை நம்பி, பாஜக இருக்கிறது. பூஜ்ஜியமும், பூஜ்ஜியமும் சேர்ந்தால், பூஜ்ஜியம்தான். ராஜ்ஜியம் கிடைக்காது." என்று தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் நடைபெற்ற அரசு விழாவில் ரூ.1,785.37 கோடி செலவிலான 1,217 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, 1,237 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 3,12,082 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

நாகர்கோவிலில் நடைபெற்ற அரசு விழாவில் கலந்து கொண்டு ஆற்றிய உரை: உங்களுக்கெல்லாம் நினைவிருக்கும் என்று நான் கருதுகிறேன். 2025 புத்தாண்டு பிறப்பதற்கு முன்பு நான் குமரிக்கு வந்தேன். முக்கடல்சூழக்கூடிய குமரி முனையில், முப்பால் புலவன் வள்ளுவனுக்கு, முத்தமிழறிஞர் கலைஞர் நிறுவிய பேரறிவுச் சிலையின் வெள்ளிவிழாவை நாம் கொண்டாடினோம். திருவள்ளுவர் சிலையையும், விவேகானந்தர் பாறையையும் இணைக்கும் கண்ணாடி இழைப் பாலத்தை திறந்து வைத்தேன். இப்போது, 2026-ல் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைவதற்கு முன்னால், அரசு விழாவில் உங்களை எல்லாம் சந்திக்க வந்திருக்கிறேன். 2004-ல் சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவ குடும்பங்களுக்கு, நிலம் கையகம் செய்யப்பட்டு வீடுகள் கட்டி கொடுத்தாலும், அரசு நிலம் என்ற வகைப்பாட்டில் இருந்தது. சொந்த வீடுகளில் குடியிருக்கும் பயனாளிகளுக்கு வரன்முறைப்படுத்தப்பட்டு இன்று பட்டா வழங்கப்படுகிறது. அதுமட்டுமல்ல, கன்னியாகுமரி வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு, 40 ஆயிரத்து 86 குடும்பங்களுக்கு பட்டா வழங்கப்படுவதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

இவ்வளவு இருந்தாலும் உங்கள் மாவட்டத்திற்குஎன்று வந்துவிட்டு, உங்களுக்கு புது அறிவிப்புகளை வெளியிடாமல் சென்றால் நன்றாக இருக்குமா? மேடையில் இருப்பவர்கள் சும்மா இருப்பார்களா! அதுவும் காங்கிரஸ் கட்சியை கேட்கவே வேண்டாம் – என்னை உரிமையோடு துளைத்து எடுத்துவிடுவார்கள். அதனால், குமரி மாவட்டத்திற்கான ஆறு புதிய அறிவிப்புகளை இப்போது நான் உங்களிடத்தில் வெளியிட இருக்கிறேன்.

சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வருகை தரக்கூடிய கன்னியாகுமரி நகராட்சியின் குடிநீர்த் தேவைகளை நிறைவு செய்ய, பழையாற்றிலிருந்து கூடுதல் குடிநீர்வழங்க28கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய திட்டம் செயல்படுத்தப்படும். மேலும், முக்கடலும் சங்கமிக்கும் இந்த பகுதியில் 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில், புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ஒன்று அமைக்கப்படும்.

இரண்டாவது அறிவிப்பு – குளச்சல் நகராட்சி மற்றும் மண்டைக்காடு பேரூராட்சி பொதுமக்களின் நீண்டகாலக் கோரிக்கையைநிறைவேற்றும் வகையில், AVM கால்வாய் 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்படும். மூன்றாவது அறிவிப்பு – களியக்காவிளை – கன்னியா குமரி சாலையில் அதிகமாக போக்குவரத்து நெரிசல் உள்ள பகுதிகளில், 9 கோடி ரூபாய் செலவில் சாலைகள் அகலப்படுத்தி மேம்படுத்தப்படும். – கல்குளம் வட்டம் – முளகுமூட்டில் உள்ள பழம்பெரும் தூய மரியன்னை பசிலிக்கா தேவாலயம், 2 கோடி ரூபாய் செலவில், அதன் பழமை மாறாமல் புனரமைக்கப் படும். தமிழ்நாடு மீனவர் நலவாரியம் மூலமாக தற்போது மீனவர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர்க்கு வழங்கப்பட்டு வரும் கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் போன்ற பல்வேறு நிதி உதவிகள் அனைத்தும் உயர்த்தி வழங்கப்படும். இதற்கான விரிவான அரசாணைகளையும் விரைவில் வெளியிடுவோம்.

ஆறாவது அறிவிப்பு – கடலில் மீன் பிடிக்கச் செல்லும்போது, காணாமல் போகும் நேர்வில், காப்பீடு உள்ளிட்ட நிவாரணங்கள் கிடைக்கும் நாள் வரை அந்த மீனவர்களின் குடும்ப வாரிசுதாரருக்கு மாதம் இரண்டாயிரம் ரூபாய் உதவித்தொகையாக மீனவர் நல வாரியம் மூலம் வழங்கப்படும்.

14 வயதிலிருந்து நான் அரசியலில் இருக்கிறேன். 50 ஆண்டு தொடர் உழைப்பால்ஒருபேரியக்கத்தின் தலைவர் என்ற பொறுப்பை அடைந்திருக்கிறேன். சட்டமன்ற உறுப்பினராக – மேயராக – அமைச்சராக – துணை முதல்வராக – எதிர்க்கட்சித் தலைவராக, இன்று, முதல்வராக இருக்கிறேன். பெருமையோடு சொல்கிறேன். நான் செல்லாத ஊரே தமிழ்நாட்டில் இல்லைஎன்றுசொல்கின்ற அளவிற்கு, பயணித்து, மக்களை நான் சந்தித்துக் கொண்டிருக்கிறேன். அதனால்தான், மக்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று அறிந்து, புரிந்து ஒவ்வொரு திட்டத்தையும் தீட்டுகிறேன்.

# வானிலை முன்னறிவிப்பு: தமிழகத்தில் பிப்.28 வரை மழை வாய்ப்பு



சென்னை: தமிழகத்தில் வரும் 28-ம் தேதி வரை மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தென்கிழக்கு வங்கக் கடல் பகுதிகளில் நிலவிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி வலுவிழந்தது. தென்னிந்தியப் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டலகீழடுக்குசுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக தென் தமிழகம் மற்றும் மேற்குத் தொடர்ச்சிமலைமாவட்டங்களில் நாளை முதல் வரும் 28-ம் தேதி வரை ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். இதர பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும். அதேபோல, மார்ச் 1 முதல் 3-ம் தேதி வரை தமிழகத்தில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், ராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தருமபுரி மற்றும் சேலம் மாவட்டங்களில் நாளையும், மேற்கூறிய மாவட்டங்கள் மற்றும் விழுப்புரத்தில் நாளை மறுநாளும் ஓரிரு இடங்களில் அதிகாலை நேரத்தில் லேசான பனிமூட்டம் காணப்படும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகாலை நேரத்தில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 34 டிகிரி செல்சியஸ், குறைந்தபட்ச 24 செல்சியஸ் அளவில் இருக்கும்.

தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக தேனி மாவட்டம் தேக்கடியில் 5 செ.மீ., கோவை மாவட்டம் பொள்ளாச்சியில் 4 செ.மீ., கோவை மாவட்டம் மக்கினம்பட்டி, சின்னக்கல்லாறு, சின்கோனா, தென்காசி மாவட்டம் செங்கோட்டை, குண்டாறு அணை, கன்னியாகுமரி மாவட்டம் பெருஞ்சாணி அணையில் 3 செ.மீ. மழை பதிவாகியுள்ளது.

செய்திகள் உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

தினத்தளம் தினசரி காலை நாளிதழ்

26.02.2026

# FACEAT&P கூட்டமைப்பின் மாநில மாநாட்டில் பங்கேற்ற வைகை கட்டிட பொறியாளர்கள் சங்க நிர்வாகிகள்




தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி அனைத்து கட்டுமான பொறியாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பின் 2026 ஆம் ஆண்டு மாநில மாநாடு தர்மபுரியில் மாநிலத் தலைவர் பொறியாளர் பிரபு தலைமையிலும், மாநில செயலாளர் பொறியாளர் துரைகண்ணன் மற்றும் மாநில பொருளாளர் பொறியாளர் செந்தில்குமார், மாநிலத்துணைத்தலைவர் பொறியாளர் புருஷோத்தமன், இணைச் செயலாளர் பொறியாளர் ராமநாதன் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது.

இதில் பொறியாளர்களின் வளர்ச்சி, வாழ்வாதாரம், நலத்திட்டம், கட்டமைப்பு மற்றும் மேம்படுதல் உள்ளிட்ட நலன்களை கருத்தில் கொண்டு பல்வேறு மிக முக்கியமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு அரசுக்கு வலியுறுத்தப்பட்டது. நடைபெற்ற இந்த மாநில மாநாட்டில் 12 மண்டலங்களைச் சேர்ந்த நிர்வாகிகள் மற்றும் மண்டலங்களின் கீழ் இயங்கும் சங்கங்களில் நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர். மண்டலம் 9-ன் கீழ் இயங்கி வரும் மானாமதுரை வைகை கட்டிட பொறியாளர்கள் சங்கத்தின் தலைவர் பொறியாளர் ஆனந்தக் கார்த்தி தலைமையிலான சங்க நிர்வாகிகள் மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மேலும் இம்மாநாட்டில் பொறியாளர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது, வளர்ந்து வரும் சாதனையாளர் விருதுகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.




### அமைச்சர் பெரியகருப்பன் தலைமையில்

# மானாமதுரை சட்டமன்ற தொகுதியின் வெல்லும் தமிழ் பெண்கள் பயிற்சி பரப்புரை பொதுக்கூட்டம்

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் மானாமதுரை சட்டமன்ற தொகுதியில் "வெல்லும் தமிழ் பெண்கள்" பயிற்சி பரப்புரைப் பொதுக்கூட்டம் சிவகங்கை மாவட்ட கழக செயலாளரும் தமிழ்நாடு கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அவர்களின் தலைமையிலும், முன்னாள் அமைச்சரும் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினரும் மாநில மகளிர் தொண்டரணி இணைச் செயலாளருமான தமிழரசி ரவிக்குமார் முன்னிலையிலும் நடைபெற்றது.

இதில் மானாமதுரை நகர் கழக செயலாளர் க.பொன்னுச்சாமி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் நகர் மன்ற தலைவருமான மாரியப்பன் கென்னடி, ஒன்றிய செயலாளர் ராஜாமணி, அண்ணாதுரை, முத்துசாமி, திருப்புவனம், இளையான்குடி ஒன்றிய, நகர, பேரூர், ஊராட்சி மற்றும் கிளைகளை சேர்ந்த செயலாளர்கள் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நடைபெற்ற இந்த பயிற்சி பரப்புரைக் கூட்டத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் அவர்களின் தலைமையில் ஆளும் திமுக அரசின் திராவிட மாடல் ஆட்சியில் பெண்களின் வளர்ச்சிக்கு செயல்படுத்திய "கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டம், விடியல் பயணம் திட்டம், புதுமைப்பெண் திட்டம், முதலமைச்சர் காலை உணவு திட்டம், தாயுமானவர் திட்டம், தோழி விடுதி திட்டம், முதியோர் உதவித்தொகை திட்டம், நான் முதல்வன் திட்டம், உங்களுடன் ஸ்டாலின், நலன் காக்கும் ஸ்டாலின் உள்ளிட்ட திட்டங்களால் மகளிர், திட்ட பயனாளிகள் மற்றும் பொதுமக்கள் அடைந்த பயன்கள் குறித்து பரப்புரைக்கப்பட்டது".

மேலும் இந்நிகழ்வில் மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் வளர்மதி கலைச்செல்வன், சிவகங்கை மாவட்ட மற்றும் மானாமதுரை சட்டமன்ற தொகுதியில் உள்ள அனைத்து பிரிவுகள், துறைகள், மற்றும் மகளிர் அணி, மகளிர் தொண்டரணி போன்ற சார்பு அணிகளை சேர்ந்த திமுக நிர்வாகிகள், கட்சி தொண்டர்கள், திட்ட பயனாளிகள், மகளிர், பூத் கமிட்டியினர் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# திருவணந்தபுரத்தில் அய்யா வைகுண்டர் சுவாமிக்கு நினைவு இல்லம்



தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் அகரக்கட்டு லூர்து நாடார் கேரளம் மாநிலத்தில் திருவணந்தபுரத்தில் அய்யா வைகுண்டர் சுவாமிக்கு நினைவு இல்லம் கட்ட 28-02-2026 அன்று அடிக்கல் நாட்டும் கேரள முதல்வர் பினராயி விஜயன் அவர்களுக்கு நன்றி தெரிவித்து கடிதம் எழுதியுள்ளார் அந்த கடிதத்தில்

கேரளம் மாநிலத்தில் திருவனந்தபுரத்தில் 28-02-2026 அன்று ஸ்ரீமன் வைகுண்ட சுவாமி (ஸ்ரீமன் நாராயணசாமி) அவர்களுக்கு கேரளம் அரசின் சார்பில் நினைவு இல்லம் அமைப்பதற்கு அடிக்கல்நாட்ட இருக்கும்கேரளம்முதல்வர்பினராயி விஜயன் அவர்களுக்கு தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் சார்பில் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்

திருவிதாங்கூர் மன்னர் ஆட்சியில் சமூக நீதிக்காக போராடியவர் ஸ்ரீமன் வைகுண்ட சுவாமி அவர்கள் 1809 ஆம் ஆண்டு சுவாமி தோப்பில் பொன்னு நாடார் வெயிலாள் இவர்களுக்கு மகனாக பிறந்தவர் அனைவராலும் முத்துக்குட்டி என்று அன்பாக அழைக்கப்பட்டவர் பிற்காலத்தில் முத்துக்குட்டி சுவாமிகள் என்று அழைக்கப்பட்டார் அன்னதானம் தர்மம் மூலம் அனைவரும் ஒன்றாக உண்ணும் முறையை ஏற்படுத்தியவர் முந்திரி கிணறு மூலம் அனைத்து சமுதாய மக்களும் ஒரே கிணற்றில் தண்ணீர் எடுப்பதற்கு உரிமை பெற்றது கொடுத்தவர் 18ஜாதிபெண்கள்மேலாகமேலாடைஅணியக்கூடாது என்றும் ஆண்கள் காலனி அணிய கூடாது என்று சட்டம் கொண்டு வந்த திருவிதாங்கூர் மன்னரால் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்ட சமுதாய மக்களுக்கு தலப்பாகை அணிய கற்றுக் கொடுத்த வீரத்துறவி அய்யா வைகுண்ட சுவாமி

அகிலத்திரட்டு வேதநூல் அய்யா வைகுண்டரை ஸ்ரீ பண்டாரம் என்றும் ஆண்டவன் என்றும் மாயோன் என்றும் நாராயணர் என்றும் சூரிய நாராயணர் என்றும் வைகுண்ட சுவாமி என்றும் பல பெயர்களில் பெருமையோடு அழைக்கிறார்கள் அதேபோல ஐயாவின் பக்தர்கள் ஸ்ரீமன் நாராயண சுவாமி என்றும் ஸ்ரீமன் வைகுண்ட சுவாமி என்றும் அன்போடும் பெருமையோடும் அழைக்கின்றார்கள் வீரத் துறவியான அய்யா வைகுண்ட சுவாமி அவர்களுக்கு திருவனந்தபுரத்தில் கேரளம் அரசின் சார்பில்நினைவுஇல்லம்அமைக்கும்கேரளமுதல்வர் மாண்புமிகு பினராயி விஜயன் அவர்களுக்கு தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் சார்பில் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம் என்று கேரளம் முதல்வர் பினராயி விஜயன் அவர்களுக்கு கடிதம் எழுதி உள்ளார்.

# சங்கரன்கோவிலில் அதிமுக சார்பில் ஜெயலலிதா பிறந்தநாள் தின விழா

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் அதிமுக சார்பில் ஜெயலலிதா பிறந்த தின விழா நடைபெற்றது. இதனை முன்னிட்டு முன்னாள் பொருளாளர் சண்முகையா,துணைச் செயலாளர் பொய்கை மாரியப்பன், விவசாய அணி செயலாளர் பரமகுருநாதன், எம்ஜிஆர் இளைஞர் அணி நிர்வாகிகள் மணிகண்டன், சுந்தரபாண்டியன், செந்தில்குமார், ராஜ்குமார், அமுதா பாலசுப்ரமணியன்,மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள்



அமைச்சரும் மாநில மகளிரணி துணைச் செயலாளருமானவி.எம். ராஜலெட்சுமி ஏற்பாட்டில் சங்கரநாராயண சுவாமி கோவிலில் தங்கத்தேர் இழுத்தனர். இதனைத் தொடர்ந்து பக்தர்கள் மற்றும் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. பழைய பேருந்து நிலையம் அருகே ஜெயலலிதாவின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு அதிமுகவினர் இனிப்புகள் வழங்கினர். இதில் முன்னாள் அமைச்சர் வி.எம். ராஜலெட்சுமி, தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் கிருஷ்ண முரளி என்ற குட்டியப்பா

எம்.எல்.ஏ, மாநில எம் ஜி ஆர் மன்ற இணைச்செயலாளர் செயலாளர் சுப்பையா பாண்டியன்துணைச் செயலாளர் கண்ணன்,மாவட்ட ஞர் அணி தலைவர் எஜமான் செந்தில்குமார், தகவல் தொழில்நுட்ப அணி நெல்லை மண்டல செயலாளர் முனைவர் சிவானந்த், கடம்பூர் மாரியப்பன், பொதுக்குழு உறுப்பினர் காளிராஜ்,ஒன்றிய செயலாளர்கள் ரமேஷ்,செல்வம், செல்வராஜ், வேல்முருகன், ரவிச்சந்திரன் இளசை தேவராஜ், ராமதுரை,மகாராஜன்,இலக்கிய அணி மாவட்ட தலைவர் பி.ஜி.பி. ராமநாதன், மாவட்டச் செயலாளர் தீக்கனல் லட்சுமணன்,தலைமைக் கழக பேச்சாளர் ராமசுப்பிரமணியன், மாவட்ட எம்ஜிஆர் மன்ற தலைவர் எஸ்.கே.கருப்பசாமி, மாவட்ட மாணவரணி பொருளாளர் ஆர்.சி மாரியப்பன், மாவட்ட நிர்வாகிகள் டாக்டர் திலீபன், மாரிச்சாமி,சந்திரன், செந்தில்குமார், சௌந்தர் (எ) சாகுல் ஹமீது, குட்டி மாரியப்பன், முத்து ராமேஸ்வரன், வைரமுத்து, கணேசன், ராம்குமார், சிவராமகிரு ஷ்ணன்நகர் மன்ற உறுப்பினர்கள் மாரிச்சாமி,ராமதுரை,தமிழ்ச்செல்வன், பரமசிவன், முத்துலட்சுமி, ராஜேஸ்வரி கந்தன், எஸ்.டி.எஸ் சரவணகுமார், நகர அவைத் தலைவர் வேலுச்சாமி, நகர பாசறை செயலாளர் நிவாஸ், ஒன்றிய எம்ஜிஆர் இளைஞர் அணி செயலாளர் நவநீதகிருஷ்ணன்,நிர்வாகிகள் கோவிந்தன், ஹரிஹர கருப்பையா, கோபால் ரத்தினம்,பாபு,சரவணன், நானா (எ) சங்கரநாராயணன் கருப்பசாமி, குருசாமி, நயினார் முஹம்மது, தங்கம், மகளிரணி பாக்கியம், மாரியம்மாள், ராமலட்சுமி, சமுத்திரம், செல்லம்மாள் உள்ளிட்ட ஏராளமான அதிமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தென்காசி தெற்கு மாவட்டம் ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதி கீழப்பாவூர் பேரூர் கழகம் சார்பில் ஜெயலலிதாவின் 78 வது பிறந்தநாள் விழாவில் பிரபாகரன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முன்னாள் மாவட்ட கழக செயலாளர் தென்காசி தெற்கு மாவட்ட அம்மா பேரவை செயலாளர் அவர்கள் தலைமையில்திருவுருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்தும் கழக கொடி ஏற்றி இனிப்பு வழங்கினார் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு பேரூர் கழக செயலாளர் S.ஜெயராமன் இதில் தலைமை கழக பேச்சாளர் தீப்பொறி அப்பாத்துரை P.V.சரவணன் ஒன்றிய கவுன்சிலர் காளிமுத்து மதியழகன் லட்சுமி சேகர் விவேகானந்தர்சாமிநாதன் மகளிர் அணிச்செயலாளர் இசக்கி அம்மாள் கவுன்சிலர் பவானி. கஸ்தூரி கணேசன் வேல் செட்டியார் செல்லச்சாமி சுந்தர்ராஜ் வார்டு கழக செயலாளர்கள் கோபால் செட்டியார் வேலுச்சாமி வேல் செட்டியார் வேல்சாமி கருப்பையா தங்கராஜ் கருப்பசாமி வெட்டும் பெருமாள் ஆறுமுக நயனார் கிருஷ்ணமூர்த்தி மணிகண்டன் கழக நிர்வாகிகள் சுடலையண்டி பொன்னுத்துரை முத்து சேகர் பிரம்ம நாயகம் பெரியசாமி. ரத்தினம் மாரியப்பன் வேல்முருகன் பாலமுருகன் கிருஷ்ண பாண்டி அருணாசலம் குமரேசன் மகேந்திரன் சாமி சேகர் ஆறுமுகபாண்டி. காளி சாமிநாடார் சந்தனமுத்து கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர் .

# தென்காசி நகரில் மங்கம்மாள் சாலை 3வது வார்டு பகுதியில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 78வது பிறந்த தின விழா

தென்காசி மாவட்டம் மற்றும் தென்காசி நகரில் மங்கம்மாள் சாலை 3வது வார்டு அஇஅதிமுக கிளை கழகத்தின் சார்பில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 78வது பிறந்த தின விழா மற்றும் அன்னதானம் வழங்கும் விழா மிகச்சிறப்பாக நடைபெற்றது.



இந்நிகழ்ச்சியில் தென்காசி அஇஅதிமுக தெற்கு மாவட்டம் செயலாளர் செல்வமோகன்தாஸ் பாண்டியன் கலந்து கொண்டு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். தொடர்ந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் அன்னதானம் வழங்கினார்.



இந்நிகழ்ச்சியில் தென்காசி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூன்றாவது வார்டு கிளைக் கழக செயலாளர் செல்வராஜ், நான்காவது வார்டு கிளைக் கழக செயலாளர் ஒய். ஜி. மாரியப்பன், நகர செயலாளர் சுடலை, அவைத்தலைவர் முத்துக்குமாரசாமி, பொதுக்குழு உறுப்பினர் கசமுத்து, மாவட்ட இலக்கிய அணி செயலாளர் முகிலன், அம்மாபேரவை இணைச் செயலாளர் பூக்கடை சரவணன், பி.பி.எஸ்.பாலமுருகன், மாவட்ட எம்ஜிஆர் மன்ற துணை செயலாளர் சாமி ஆசாரி, வெள்ள பாண்டி, சிறுபான்மை பிரிவு மாவட்ட செயலாளர் அகமது ஷா, எம்ஜிஆர் மன்ற மாவட்ட பொறுப்பாளர் மாரிமுத்து, தகவல் தொழில்நுட்ப பிரிவு நகர செயலாளர் சங்கர், தென்காசி நகர்மன்ற 2வது வார்டு உறுப்பினர் உமா மகேஸ்வரன், வழக்கறிஞர் கார்த்திக் குமார், சந்தோஷ், உதயகுமார், வெங்கடேஷ், பழனி, சுரேஷ், இசக்கி, மற்றும் கழக முன்னணியினர் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை மூன்றாவது வார்டு கிளைக் கழகத்தினை சேர்ந்த கழகத் தொண்டர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.



கன்னியாகுமரி மாவட்டம் வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையத்தில் பேருந்துகளாக காத்திருக்கும் பெண்களை அவதூறுக பேசி, நகைகளை பறிக்கும் நோக்கில் கட்டைக்கம்புகளால் அச்சுறுத்தி வரும் நபரால் பரபரப்பு ஏற்பட்டதுமேலும் அந்த நபரை பேருந்து நிலையத்தில்இருந்து வெளியேற்ற முயற்சிமேற்கொண்ட மாநகராட்சி காவலர்களை,அந்த நபர் அடித்து,கடித்து கத்தி உள்ளிட்ட ஆயுதங்களுடன் கொலைவெறி தாக்குதல் நடத்தியதால் மேலும் பரபரப்பு ஏற்பட்டது,பின்னர் பொதுமக்கள் உதவியுடன் பிடித்து அங்கு நின்ற போலீசாரிடம் ஒப்படைப்பு இதுபோன்ற நபர்களை பேருந்து நிலையத்துக்குள் நுழைய அனுமதிக்க கூடாது,பயணிகளுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது. கன்னியாகுமரி மாவட்டம் வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையத்தில் பேருந்துகளாக காத்திருக்கும் பெண்களை அவதூறுக பேசி, நகைகளை பறிக்கும் நோக்கில் கட்டைக்கம்புகளால் அச்சுறுத்தி வரும் நபரால் பரபரப்பு ஏற்பட்டதுமேலும் அந்த நபரை பேருந்து நிலையத்தில் இருந்து வெளியேற்ற முயற்சி மேற்கொண்ட மாநகராட்சி காவலர்களை,அந்த நபர் அடித்து,கடித்து கத்தி உள்ளிட்ட ஆயுதங்களுடன் கொலைவெறி தாக்குதல் நடத்தியதால் மேலும் பரபரப்பு ஏற்பட்டது,பின்னர் பொதுமக்கள் உதவியுடன் பிடித்து அங்கு நின்ற போலீசாரிடம் ஒப்படைப்பு இதுபோன்ற நபர்களை பேருந்து நிலையத்துக்குள் நுழைய அனுமதிக்க கூடாது,பயணிகளுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.

# நல்லகண்ணு மறைவு ஈடுசெய்ய முடியாத இழப்பு: நடிகர் ரஜினிகாந்த் இரங்கல்





இந்திய கம்யூனிஸ்ட் மூத்த தலைவர் நல்லகண்ணுவின் இழப்பு தமிழக மக்களுக்கு ஈடு செய்யமுடியாத இழப்பு என்று நடிகர் ரஜினி காந்த் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் இரா.நல்லகண்ணு (பிப். 25) காலமானார். அவருக்கு வயது 101. ரத்த அழுத்தம், சிறுநீரக கோளாறு காரணமாக பிப்ரவரி 1 ஆம் தேதி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவருக்கு,பல்துறை மருத்துவக் குழுவினர் தொடர்சிகிச்சைஅளித்து வந்தனர்.

வென்டிலேட்டர் உதவியுடன்செயற்கைசுவாசம் வழங்கப்பட்டு வந்தது. கடந்த இரு நாள்களாக அவரின் உடல்நிலை பின்னடைவை சந்தித்த நிலையில், இன்று உயிர் பிரிந்ததாக மருத்துவமனை நிர்வாகம்தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக நடிகர் ரஜினிகாந்த் வெளியிட்ட பதிவில், இந்திய கம்யூனிஸ்ட் மூத்த தலைவர் நல்லகண்ணுவின் இழப்பு தமிழக மக்களுக்கு ஈடுசெய்ய முடியாதது. மாறாத கொள்கைப் பிடிப்புடன் வாழ்ந்து மறைந்த அய்யா நல்லுகண்ணுவின் ஆன்மா சாந்தியடையட்டும். ஆழ்ந்த அனுதாபங்கள். இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

# திருப்பத்தூர் மாவட்ட நீதிமன்றத்திற்கு வெடிகுண்டு மிரட்டல்!



திருப்பத்தூர் ஒருங்கிணைந்த மாவட்ட நீதிமன்றத்திற்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

நீதிபதிகள்,வழக்குரைஞர்கள், பணியாளர்கள் நீதிமன்றத்தை விட்டு வெளியேறியதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் நகரின் மையப்பகுதியில் உள்ள திருப்பத்தூர் மாவட்ட மற்றும் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் வெடிகுண்டு இருப்பதாக புதன்கிழமை (பிப். 25) மர்ம நபர்கள் மிரட்டல் விடுத்துள்ளனர்.

இதையடுத்து நீதிமன்றத்தில் இருந்து நீதிபதிகள், நீதிமன்ற பணியாளர்கள், வழக்காடிகள், வழக்குரைஞர்கள் நீதிமன்ற வளாகத்தை விட்டு வெளியேறியுள்ளனர். வேலூரில் இருந்து மோப்ப நாய்கள் வரவழைக்கப்பட்டு சோதனை நடைபெற்று வருகிறது.



# தொளசம்பட்டி நியாய விலைக்கடையை அமைச்சர் ராஜேந்திரன் திறந்து வைத்தார்

சேலம் மாவட்டம் தொளசம்பட்டி சந்தை பேட்டை அருகில் உள்ள புதிய நியாயவிலை கடை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.15 லட்சம் மதிப்பில் புதிதாக நியாயவிலை கடை கட்டப்பட்டது. இதனைத் தொடர்ந்து 25.02.26 சிறப்பு விருந்தினராக சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.ராஜேந்திரன் அவர்கள் கலந்து கொண்டு நியாயவிலை கடையை திறந்து வைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு பொருட்களை வழங்கினார்.

இதன் மூலம் தொளசம்பட்டி, சந்தைப்பேட்டை மற்றும் சொட்டையனூர் பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களுக்கு உதவியாக இருக்கும். இந்த நிகழ்ச்சியில் ஓமலூர் தெற்கு ஒன்றிய செயலாளர் ACM. செல்வகுமரன், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் KSR. சண்முகம், முன்னாள் பஞ்சாயத்து தலைவர் சென்னிமலை மற்றும் திமுக கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்டம், சத்திசாலை, ஒயாசிஸ் மஹாலில் நேற்று (25.02.2026) மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் தலைமையில் "கால்நடை வளர்ப்பு உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி குறித்த மண்டல அளவிலான விழிப்புணர்வு பயிலரங்கத்தினை குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்.உடன் கால்நடை பராமரிப்புத்துறையின் மண்டல இணை இயக்குநர் மரு.பாஸ்கர், துணை இயக்குநர் மரு.முருகன் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

# ஈரோடு மாவட்ட கலெக்டர் கந்தசாமி வழிகாட்டுதலின்படி, சமூகநலத்துறையின் சார்பில் பெண் குழந்தைகளை காப்போம், பெண் உள்ளூர் குழு உறுப்பினர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி நடைபெற்றது



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில்நேற்று(25.02.2026) மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி வழிகாட்டுதலின்படி, மாவட்ட சமூக நல அலுவலகத்தின் மூலம் பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்டத்தின் கீழ் உள்ளக மற்றும் உள்ளூர் குழு உறுப்பினர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி நடைபெற்றது. ஈரோடு மாவட்ட சமூகநல அலுவலகத்தின் மூலம் பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்டத்தின் கீழ் உள்ளக மற்றும் உள்ளூர் குழு உறுப்பினர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சியில், பணிபுரியும் இடங்களில் பெண்களுக்கு எதிரான பாதுகாப்பு சட்டம் 2013 குறித்தும், மேலும், உள்ளக குழு எவ்வாறு அமைக்கப்பட வேண்டும். புகார் மனுக்கள் வரப்பெற்றால் எவ்வாறு கையாளவது மற்றும் விசாரணை எத்தனை நாள்களுக்குள் மேற்கொள்ளலாம் என்பது குறித்தும், கல்லூரி மற்றும் தனியார் நிறுவனங்களில் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பது குறித்தும், பணியிடங்களில் பெண்களுக்குத் எதிரான பாலியல் துன்புறுத்தல் தடுப்பது குறித்தும் இப்பயிற்சி யில் எடுத்துரைக்கப்பட்டது. இப்பயிற்சியில் அரசு துறை, தனியார் நிறுவனங்கள், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள், அரசு மற்றும் தனியார் கல்லூரிகள், வணிகரீதியிலான நிறுவனங்க ளில் உள்ளக குழு உறுப்பினர்கள் மற்றும் உள்ளூர் குழு நோடல் அலுவலர்கள், சமூகநலத்துறை களப்பணியாளர்கள் உள்ளிட்ட 240 நபர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில், மாவட்ட சமூகநல அலுவலர் சு. சண்முகவடிவு, வழக்கறிஞர் தேன்மொழி உட்பட துறைசார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



ஈரோட்டில் வாரந்தோறும் திங்கட்கிழமை இரவு முதல் செவ்வாய்க்கிழமை வரை ஜவுளி சந்தை நடைபெறுவது வழக்கம். இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு வழக்கம் போல் ஜவுளி வாரச்சந்தை கூடியது. தற்போது நூலின் விலை திடீரென அதிகரித்ததால் துணிகளின் விலை உயர்ந்தது. இதன் எதிரொலியாக திங்கட்கிழமை கூடிய ஜவுளி சந்தையில் வெளிமாநில வியாபாரிகள் அதிக அளவில் வரவில்லை. இதனால் ஜவுளி வாரச்சந்தை வெறுசோடி காணப்பட்டது.

### தூத்துக்குடி தெற்கு மாவட்ட அதிமுக சார்பில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 78வது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு

# அவரது திருவுருவப்படத்திற்கு முன்னாள் அமைச்சர் எஸ்.பி. சண்முகநாதன் மலர்தூவி மரியாதை செலுத்தி நலத்திட்ட உதவிகளை வழங்கினார்

மறைந்த தமிழக முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மாவின் 78வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு' தூத்துக்குடி தெற்கு மாவட்ட கழகம் சார்பில் டூவிபுரத்தில் உள்ள மாவட்ட கழக அலுவலகம் முன்பு அலங்கரித்து வைக்கபட்டிருந்த புரட்சித்தலைவி அம்மாவின் திருவுருவப்படத்திற்கு தூத்துக்குடி தெற்கு மாவட்ட செயலாளரும் , முன்னாள் அமைச்சருமான எஸ்.பி சண்முகநாதன் மலர் தூவி மரியாதை செலுத்தி பொது மக்களுக்கு இனிப்புகள் மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அதனை தொடர்ந்து தூத்துக்குடி மத்திய பகுதி செயலாளர் ஜெய்கணேஷ் ஏற்பாட்டில் தூத்துக்குடி பழைய மாநகராட்சி முன்பு ஹார்ட் பாக்ஸ், டவா, சேலை உள்ளிட்ட ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியிலும்,

மாவட்ட அண்ணா ஆட்டோ தொழிற்சங்க செயலாளர் நிலா சந்திரன் ஏற்பாட்டில் ஆட்டோ தொழிலாளர்கள் 100 பேருக்கும் நலத்திட்ட உதவிகள் மற்றும் 500 பேருக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியிலும், 14 வது வட்டக் கழக செயலாளர் கொம்பை ஏற்பாட்டில் சின்னகண்ணுபுரத்தில் ,மாவட்ட சிறுபான்மையினர் நலப் பிரிவு செயலாளர் கே.ஜே பிரபாகர் ஏற்பாட்டில் மார்க்கெட் முன்பு, வடக்கு பகுதிகழகச் செயலாளர் சந்தனபட்டு ஏற்பாட்டில் அன்னதாய் திருமண மண்டப அருகில், 3வது வார்டு வட்டக் கழக செயலாளர் வக்கீல் முனியசாமி ஏற்பாட்டில் எட்டயபுரம் ரோடு பகுதியிலும், மேற்கு பகுதி மாணவரணி செயலாளர் தங்க மதன் ஏற்பாட்டில் மில்லர்புரம் பகுதியிலும், அதிமுக பிரமுகர் கனகவேல் ஏற்பாட்டில் 1ம்கேட் பகுதியிலும்

, மாவட்ட எம்ஜிஆர் இளைஞர் அணி துணை செயலாளர் சண்முகபுரம் மாடசாமி ஏற்பாட்டில் சண்முகபுரம் பகுதியிலும், முத்தையாபுரம் பகுதியால் தெற்கு பகுதி செயலாளர் சுடலைமணி ஏற்பாட்டிலும்,

35 வது வட்டக் கழக செயலாளர் தூத்துக்குடி. மணிகண்டன் ஏற்பாட்டில் சிதம்பரநகர் பகுதியில், நடைபெற்ற நிகழ்ச்சியில்தூத்துக்குடி தெற்கு மாவட்ட கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான எஸ். பி சண்முகநாதன் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகள் மற்றும் அன்னதான நிகழ்ச்சிகளை துவங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் அனைத்துலக எம். ஜி.ஆர் மன்ற இணைச் செயலாளர் பி.ஏ. ஆறுமுகநயினார், மாவட்ட கழக அவைத்தலைவர் வழக்கறிஞர் திருப்பாற்கடல், மாநில அமைப்பு சாரா ஓட்டுநர்கள் அணி இணைச் செயலாளர் பெருமாள்சாமி,முன்னாள் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவரும் மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுனர் அணி செயலாளருமான இரா. சுதாகர், மாவட்ட கழக பொருளாளர் சேவியர், பகுதி கழக செயலாளர்கள் முருகன், ஜெய்கணேஷ், நட்டார்முத்து, சுடலைமணி, சந்தனப்பட்டு,கழகபொதுக்குழு உறுப்பினர்



அய்யாதுரைபாண்டியன்,மாவட்டசார்புஅணி செயலாள்கள் எம். பெருமாள், பில்லா விக்னேஷ், நடராஜன், டேக் ராஜா, அருண் ஜெபக்குமார், கே.ஜெ.பிரபாகர், ஜெ.ஜெ.தனராஜ், சுதர்சன் ராஜா, முன்னாள் மேயர் அந்தோணிகிரேஸி, அண்ணா தொழிற்சங்க போக்குவரத்து பிரிவு செயலாளர் கல்விகுமார், இணைச் செயலாளர் லெட்சுமணன், நெல்லை மண்டல தகவல் தொழில்நுட்பப் பிரிவு இணைச் செயலாளரும் மநகராட்சி எதிர்கட்சி கொறடாவுமான மந்திரமூர்த்தி, மாவட்ட எம்.ஜி.ஆர் மன்ற இணைச் செயலாளர்கள் சத்யாலெட்சுமணன், ஜோதிடர் ரமேஷ்கிருஷ்ணன், ஒன்றிய எம்.ஜி.ஆர் இளைஞர் அணி செயலாளர் அங்கமங்கலம் பாலமுருகன்,தலைமைக் கழக பேச்சாளர் முருகானந்தம், மாவட்ட அம்மாபேரவைதுணைச் செயலாளர் எஸ்.கே. மாரியப்பன், மாவட்ட வழக்கறிஞர் பிரிவு நிர்வாகிகள் சுகந்தன் ஆதித்தன், ஆண்ட்ருமணி, ரவிந்திரன் முனியசாமி, சரவணபெருமாள், செங்குட்டுவன், சரவணன்குமார், ராஜ்குமார், ஜில்லு ரமேஷ், நிர்வாகிகள் ஜான்சன்தேவராஜ், ஏ.கே.மைதீன், ஹார்பர்பாண்டி,மாவட்ட பிரதிநிதி கே.கே.பி.விஜயன், மாணவர் அணி காலிப் உசேன், மாவட்ட மகளிர் அணி நிர்வாகிகள் மெஜூலா, இராஜேஸ்வரி, தமிழரசி, ஞானபுஷ்பம், முத்துலெட்சுமி, விஜயலெட்சுமி சுகன்யா, அனிஷா அரபி, சரோஜா, மருதம்மாள், ஜீவா, கமலா, பண்டாரவிளை திருத்துவசிங்,பால்துரை, முன்னாள் கவுன்சிலர் பொன்ராஜ், லிங்கராஜ், அண்ணா தொழிற்சங்க போக்குவரத்து நிர்வாகிகள் பார்வதி, சக்திவேல், வீரபாண்டி, முத்துக்குமார், அன்பரசு பிரபாகர், முத்துகிருஷ்ணன், அருன்ராஜ், பாலகுமார், பொன்சிங், பொன்னம்பலம்,வட்ட கழகசெயலாளர்கள் கொம்பையா, மகாராஜா, சங்கர், ஜெரால்டு, மணிகணேஷ், அருண்ஜெயக்குமார், பொன்சிங், ராஜ்குமார் அபிரகாம், ரெங்கன், ரகுநாதன், மனோகர், பூக்கடை வேலு, உலகநாதபெருமாள், முருகேசன், பூர்ணசந்திரன், செல்வராஜ், மாடசாமி, மாரிமுத்து, பெருமாள்ராஜ், எம். டி.ராஜா,சேவீர்ராஜ்,தகவல் தொழில்நுட்பப் பிரிவு நிர்வாகிகள் தூத்துக்குடி மணிகண்டன், சொக்கலிங்கம், சகாயராஜா, இம்ரான்அரபி, சரவணவேல், ஆல்வின்துரைசிங், கொங்கு பொன்முருகன், அக்ஷய் லிங்கம், உதயகுமார், தளவாய்ராஜ், பரிபூரணராஜா,பாலஜெயம்,சாம்ராஜ், சிதம்பரம், ஜெகதீஷ், ஆனந்த், உதயா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# ஈரோட்டின் அடையாளத்தை மாற்றும் வகையில், சர்வதேச தரத்திலான ஒரு புதிய உலகமாக ஃபார்ச்சூன் சிட்டி உருவாகிறது

ஈரோட்டின் அடையாளத்தை மாற்றும் வகையில், சர்வதேச தரத்திலானஒருபுதியஉலகமாக 'ஃபார்ச்சூன் சிட்டி' உருவாகிறது.சுமார் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில், நான்கு தளங்களுடன் அமைய உள்ள 'டைடல் பூங்கா' அடிக்கல் நாட்டு விழாவை, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் (26.02.2026)காலை 11 மணிக்கு காணொளி வாயிலாகத் தொடங்கி வைக்கஉள்ளார்.டைடல் பார்க்குடன் சர்வதேச தரத்தில் சகல வசதிகளுடன் அமையும் ஷாப்பிங் சிட்டியாக ஃபார்ச்சூன் சிட்டி' அமைய உள்ளது. இது தொடர்பாக ஈரோட்டில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பு நிகழ்ச்சியில், நிர்வாக தலைவர் லோட்டஸ் பெரியசாமி, துணைத்தலைவர் தேவராஜன்,நிர்வாக இயக்குனர் குமார் மற்றும் இணை இயக்குனர் ரவிச்சந்திரன் ஆகியோர் செய்தியாளர்களை சந்தித்து இத்திட்டம் குறித்த விரிவான தகவல்களைப் பகிர்ந்து கொண்டனர்.

ஈரோட்டின் புகழ்பெற்ற 'டெக்ஸ்வேலி' வளாகமே இனி 'ஃபார்ச்சூன் சிட்டி'யாக உருவெடுக்கிறது.இனி டெக்ஸ்வேலி என்பது ஃபார்ச்சூன் சிட்டியின் ஒரு அங்கமாக மாறும். இந்த வளாகத்தில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா மட்டுமின்றி, சர்வதேச தரத்திலான வணிக வளாகம், முன்னனி வணிக முத்திரைகளின் விற்பனை நிலையங்கள், பல்பொருள் அங்காடிகள் மற்றும் தங்கும் வசதிகள் இடம்பெற உள்ளன. மேலும், முன்னணி உணவகங்கள், உணவுக் கூடங்கள், திரையரங்கங்கள்,குழந்தைகளுக்கான பொழுதுபோக்கு விளையாட்டு மையங்கள், திருமண மண்டபங்கள், பெருநிறுவன அலுவலகங்கள் மற்றும் முன்னணி கட்டுமான நிறுவனங்களின் குடியிருப்புகள் என ஒரு முழுமையான நகர அனுபவத்தை வழங்கும் வகையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது. மேற்கு தமிழகத்தை மேலை நாடுகளுக்கு இணையான உள்கட்டமைப்புடன் உருவாக்குவதே இதன் நோக்கம்.




இந்தப் பணிகள் அனைத்தும் 2026 மார்ச் மாதம் தொடங்கி, ஒரே ஆண்டிற்குள் நிறைவடையும் வகையில் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. இதன் முதல் கட்டமாக, துபாய் மற்றும் சிங்கப்பூர் பாணியில் 'யாரா' அதிநவீன பல்பொருள் அங்காடி, 13-க்கும் மேற்பட்ட சர்வதேச வணிக முத்திரைகள், 18,000 சதுரடியில் விளையாட்டு மண்டலம், நிறுவனங்களுக்கான பணித்தளங்கள்,500பேர் அமரக்கூடிய உணவுக் கூடம் மற்றும் 3000 மகிழுந்துகள் நிறுத்தும் வசதி ஆகியவை அமைய உள்ளன. இரண்டாம் கட்டமாக,தென்னிந்தியாவின் பிரபலமான உணவகங்கள், நவீன திருமண மண்டபங்கள், அதிநவீன திரையரங்கங்கள் மற்றும் ஒரே நேரத்தில் 120 வாகனங்களுக்கு மின்சாரம்ஏற்றக்கூடிய அதிவேக மின்ஏற்று நிலையம்ஆகியவைநிறுவப்பட உள்ளன. மேலும், பிரத்யேக நகை விற்பனைப் பிரிவு மற்றும் திருமண ஜவுளிப் பிரிவுகளும் இடம்பெறுகின்றன. மூன்றாம் கட்டமாக, பிரத்யேக அலுவலகங்கள், குடியிருப்புகள், வெளிப்புற விளையாட்டுகள் மற்றும் செயற்கை நுண்ணறிவு, சில்லறை வணிக மேலாண்மை பயிற்சிக்கான கல்வி நிறுவனங்கள் அமைய உள்ளன. எதிர்கால உலகம் காணப்போகும் ஈரோட்டின் முகமாக 'ஃபார்ச்சூன் சிட்டி' திகழும் என செய்தியாளர்கள் சந்திப்பில் நிறுவனத்தினர் பெருமிதத்துடன் தெரிவித்தனர்.

# சென்னை புறநகர் ரயில் சேவை பாதிப்பு: மாற்று ஏற்பாடு செய்ய மநீம கோரிக்கை

சென்னை: சென்னை மின்சார ரயில் சேவை பாதிப்பு விவகாரத்தில் தென்னக ரயில்வே போர்க்கால அடிப்படையில் மாற்று ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று மக்கள் நீதி மய்யம் வலியுறுத்துகிறது. அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், "சென்னை மாநகரின் லட்சக்கணக்கான ஏழை, எளிய மக்கள் தங்களது அன்றாட போக்குவரத்துக்கு நம்பியிருந்த புறநகர் ரயில்கள் முன்னறிவிப்போ, தகுந்த முன்னேற்பாடோ இன்றி ரத்து செய்யப்பட்டிருப்பது அதிர்ச்சியளிக்கிறது.

தொழிலாளர்கள், வியாபாரிகள்,வேலைக்குச் செல்பவர்கள், மாணவர்கள் உட்பட அனைத்துத் தரப்பினரும் இதனால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு ரயில் நிலையத்திலும் ஆயிரக்கணக்கான மக்கள் மணிக்கணக்கில் ரயில்களுக்காகக் காத்திருக்கிறார்கள். முதியவர்கள், பெண்கள், குழந்தைகளால் ரயிலில் ஏற முடியவில்லை. கடும் கூட்ட நெரிசல் காரணமாக மூச்சுவிடக் கூட முடியாமல் தவிக்கின்றனர். இதனால் பொதுமக்கள் கடுமையான வேதனைக்கும், மன உளைச்சலுக்கும் ஆளாகியுள்ளனர். பொதுத் தேர்வுகள் நெருங்கும்



வேளையில் நமது மாணவர்களுக்கு இப்படியொரு சித்ரவதை கடுமையான உளநெருக்கடியை உண்டாக்குகிறது.

தென்னக ரயில்வே உடனடியாக செயல்பட்டு மக்களின் இன்னல்களைத் துடைக்க முன் வரவேண்டும். போர்க்கால அடிப்படையில் மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்று மக்கள் நீதி மய்யம் வலியுறுத்துகிறது" என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் காளிதிம்பம் மலைக்கிராமத்திற்கு முதன்முறையாக அரசுப் பேருந்து இயக்கப்பட்டது. 300க்கும் மேற்பட்ட பழங்குடியின மக்கள் வசிக்கும் இப்பகுதிக்கு வந்த பேருந்தை, மக்கள் தங்களின் பாரம்பரிய 'பீச்சில்' இசை முழங்க உற்சாகமாக வரவேற்றனர். நீண்ட காலக் கோரிக்கையை நிறைவேற்றிய அரசுக்கு கிராம மக்கள் நெகிழ்ச்சியுடன் நன்றி தெரிவித்தனர்.

## சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 ஐ முன்னிட்டு

# ஈரோடு மாவட்டத்தில் 354 அலுவலர்களுக்கு பயிற்சிக் கூட்டம்



இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுரைப்படி, எதிர்வரும் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல், 2026 ஐ முன்னிட்டு ஈரோடு மாவட்டத்தில் நேற்று 25.02.2026 பறக்கும் படைக் குழு, நிலையான கண்காணிப்புக் குழு, வீடியோ கண்காணிப்புக் குழு, வீடியோ பார்வையிடும் குழு மற்றும் கணக்கீட்டுக் குழு உள்ளிட்ட குழுவில் இடம்பெற்ற 354 அலுவலர்களுக்கு பயிற்சிக் கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தேர்தல் தொடர்பான முன்னேற்பாடு பணிகள், அலுவலர்களின் பொறுப்புகள் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விரிவாக பயிற்சி அளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஈரோடு மாவட்டத்தில் District Intelligence Committee (மாவட்ட நுண்ணறிவு குழு) கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் நேற்று25.02.2026மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது. மேற்படி, நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் வெளிப்படையான மற்றும் நேர்மையான முறையில் தேர்தலை நடத்துவது தொடர்பாகவும், வேட்பாளர்களின் தேர்தல் செலவுகளை கண்காணிப்பது குறித்தும்,சட்டவிரோதமாக பணப்பறிமாற்றம் நடைபெறுவதை தடைசெய்தல் தொடர்பாகவும், வாக்காளர்களுக்கு இலவச பொருட்கள் வழங்குவதை தடைசெய்தல் தொடர்பாகவும், பிற மாநிலங்களிலிருந்து சட்டவிரோதமாக கொண்டுவரப்படும் போதைப்பொருட்களை தடைசெய்தல் தொடர்பாகவும், சந்தேகத்திற்கிடமான அதிகளவில் நடைபெறும் வங்கிப் பணப்பரிவர்த்தனைகளை ஆய்வு செய்து தினசரி அறிக்கையினை செலவின கண்காணிப்புக் குழுவிற்கு அளிப்பது தொடர்பாகவும் ஆய்வுக்கூட்டம் நடத்தப்பட்டது.

மேற்படி ஆய்வுக்கூட்டத்தில் ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அ.சுஜாதா, மாவட்ட வருவாய் அலுவலர்சு. சாந்த குமார்,சார் ஆட்சியர் (கோபிசெட்டிபாளையம்) சிவானந்தம் ,மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) தேன்மொழி, (ஈரோடு), வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா, உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.




ஈரோடு மாவட்டம், சத்திசாலை, ஒயாசிஸ் மஹாலில் நேற்று (25.02.2026) மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் தலைமையில் "கால்நடை வளர்ப்பு உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி குறித்த மண்டல அளவிலான விழிப்புணர்வு பயிலரங்கத்தினை துவக்கி வைத்து, பேசினார். உடன் கால்நடை பராமரிப்புத்துறையின் மண்டல இணை இயக்குநர் மரு.பாஸ்கர், துணை இயக்குநர் மரு.முருகன் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.



ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் நேற்று (25.02.2026) மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் எதிர்வரும் தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026யை முன்னிட்டு பறக்கும்படை, நிலையான கண்காணிப்புக்குழு, வீடியோ கண்காணிப்புக்குழு, வீடியோ பார்வையிடும் குழு, கணக்கீட்டுக்குழு உள்ளிட்ட குழுவினர்களுக்கான பயிற்சிக்கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்தகுமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) தேன்மொழி, தேர்தல் நடத்தும் அலுவலர்கள், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் காவல் துணை கண்காணிப்பாளர்கள் உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்டம் பவானி அந்தியூர் பிரிவு பகுதியில் அதிமுக சார்பில், பவானி சட்டமன்ற உறுப்பினர் கே.சி. கருப்பணன் தலைமையில், முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா 78வது பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது . இந்த நிகழ்வில் ஜெயலலிதாவின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. தொடர்ந்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டது.



ஈரோடு மாவட்டம் சித்தோடு தனியார் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு சார்பில் சட்ட விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. இம்முகாமில் மாணவர்களுக்கு அவர்களுக்கான சட்ட உரிமைகள் மற்றும் பாதுகாப்பு வழிமுறைகள் குறித்து விரிவாக விளக்கப்பட்டது. இதில் கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் ஏராளமான மாணவ, மாணவிகள் கலந்துகொண்டு விழிப்புணர்வு பெற்றனர்.

# புதுவை பள்ளி மாணவிகளுக்கு மார்ச் 8 முதல் HPV தடுப்பூசி போடப்படும்: சுகாதாரத்துறை இயக்குநர்




புதுச்சேரி: இலவச எச்பிவி தடுப்பூசி திட்டத்தின் கீழ் புதுச்சேரியின் 4 பிராந்தியங்களில், 14 ஆயிரம் பள்ளி மாணவிகளுக்கு மார்ச் 8 முதல் தடுப்பூசி போடப்படும் என புதுச்சேரி சுகாதாரத் துறை இயக்குநர் செவ்வேள் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய செவ்வேள், "இந்தியாவில் பெண்களுக்கு ஏற்படும் புற்றநோயில் கர்ப்ப வாய் புற்றுநோய் இரண்டாவது இடத்தில் உள்ளது. 99.7 சதவீதம் கர்ப்பப்பை வாய் புற்றுநோய் மனித பாப்பிலோமா வைரசான எச்பிவி வைராஸ் ஏற்படுகிறது. இந்த புற்றுநோயை எச்பிவி தடுப்பூசி மூலம் முழுமையாக தடுக்கலாம். இந்த இலவச தடுப்பூசி திட்டத்தை பிரதமர் மோடி, வருகிற பிப்.28ம் தேதி ராஜஸ்தான் மாநிலம் அஜ்மீரில் துவக்கி வைக்க உள்ளார். இத்திட்டத்தின் கீழ், 14 முதல் 15 வயதிற்கு உட்பட்ட சிறுமிகளுக்கு இலவசமாக எச்பிவி தடுப்பூசி செலுத்தப்படும். இந்த தடுப்பூசி ரூ.4 ஆயிரம் விலையுள்ளது. தனியாரிடம் கிடைப்பது மிக குறைவு. அதாவது ஒரு சதவீதம் தான் கிடைக்கும்.

மத்திய அரசு இந்த தடுப்பூசியை தகுதியுள்ள அனைவருக்கும் இலவசமாக தரவுள்ளது. புதுச்சேரி, காரைக்கால், மாஹே, ஏனாமில் அரசு,தனியார் பள்ளிகளில் படிக்கும் 14 ஆயிரம் சிறுமிகளுக்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலம் இந்த தடுப்பூசி போடப்படும். வரும் மார்ச் 8ம் தேதி முதல் 3 மாதத்திற்கு தினந்தோறும் வேலை நாட்களில் காலை 9 முதல் மதியம் 1 வரை மாணவிகளுக்கு தடுப்பூசி செலுத்தப்படும்.

அதன் பிறகு தடுப்பூசி திட்டங்களில் வியாழக்கிழமைகளில் வாரம் ஒரு நாள் போடப்படும். பெற்றோரின் முழு ஒப்புதல் பெற்ற பிறகே சிறுமிகளுக்கு தடுப்பூசி போடப்படும். இதில் பக்க விளைவு இல்லை. பாதுகாப்பானது . புதுச்சேரியில் தற்போது வைரஸ் காய்ச்சல் தான் உள்ளது. பறவைகாய்ச்சல் அறிகுறி இல்லை" என்று தெரிவித்தார்.



ஈரோடு மாவட்டம் டி.என்.பாளையம் கிழக்கு ஒன்றிய அதிமுக சார்பில், முன்னாள் முதல்வர் ஜெயலலிதா பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு கிழக்கு ஒன்றிய செயலாளர் ஹரி பாஸ்கர் தலைமை தாங்கினார். பேரூர் செயலாளர் ரமேஷ் முன்னிலை வகித்தார். டி.என். பாளையம் அண்ணா சிலை அருகே அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த ஜெயலலிதாவின் திருவுருவ படத்திற்கு நிர்வாகிகள் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.